2015 ஆகஸ்ட் 24] [பேரவைத் தலைவர்]

முற்பகல் 10–05

சிம்மம் சிம்மாசனத்தில், வரவேற்கிறோம் சிவப்புக் கம்பளத்தில். (மேசையைத் தட்டும் ஒலி) பேரவையிலே குலசாமி, பேருவகையில் இப்பூமி. (மேசையைத் தட்டும் ஒலி) மகராசி வந்துள்ளார், மாதரசி வந்துள்ளார், (மேசையைத் தட்டும் ஒலி) மனித சக்தி கடந்த, மகா சக்தியாக வந்துள்ளார். (மேசையைத் தட்டும் ஒலி) புகழரசி வருகையால், பேரவையும் வெற்றி நடையில். (மேசையைத் தட்டும் ஒலி) உலகமெங்கும் உலவுகிற தமிழ் இனத்தை தம் உயிராய் காக்கிற, தாய்க்கே இனி எப்பொழுதும், எக்காலமும், (மேசையைத் தட்டும் ஒலி) எதிலும் வெற்றி, வெற்றியென தரணி முழுவதும் ஒலிக்கட்டும். (மேசையைத் தட்டும் ஒலி) பத்து கோடி தமிழ் இனமும் பயன் பல பெற்று, பரணி பாடட்டும். பல்லாண்டு, பல்லாண்டு நலமோடு, புகழோடு, உயர்வோடு, வளமோடு, (மேசையைத் தட்டும் ஒலி) சிறப்போடு வாழ்வாங்கு வாழ, எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகிறேன். மாண்புமிகு அம்மா அவர்களை வருக, வருக என பணிந்து வணங்கி வரவேற்கிறேன். (மேசையைத் தட்டும் பலத்த ஒலி)

2. இரங்கற்குறிப்புகள்

முன்னாள் உறுப்பினர்கள் மறைவு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *இரங்கற்குறிப்புகள். தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை முன்னாள் உறுப்பினர்களான திரு. தி.ப. ஆறுமுகம் அவர்கள் 18–8–2014 அன்றும், திரு. பி. முருகையன் அவர்கள் 27–3–2015 அன்றும், திரு. செ. கிருஷ்ணன் அவர்கள் 3–4–2015 அன்றும், திரு. ஆர். கிருஷ்ணசாமி கோபாலர் அவர்கள் 9–4–2015 அன்றும், திரு. கே. மருதாசலம் அவர்கள் 15–4–2015 அன்றும், திரு. இரா. மகேந்திரன் அவர்கள் 18–4–2015 அன்றும், திரு. சோ. பால்ராஜ் அவர்கள் 4–5–2015 அன்றும், திரு. அழகு திருநாவுக்கரசு அவர்கள் 13–5–2015 அன்றும், திரு. ச. சங்கமுத்து தேவர் அவர்கள் 2–6–2015 அன்றும் மற்றும் திரு. கு. தங்கமுத்து அவர்கள் 20–7–2015 அன்றும் மறைவுற்ற செய்தியினை இப்பேரவைக்கு வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன்.*

திரு. தி.ப. ஆறுமுகம் அவர்கள் 1996 முதல் 2001 வரை திருச்செங்கோடு தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப்

[பேரவைத் தலைவர்] [2015 ஆகஸ்ட் 24

பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு நல்ல முறையில் பணியாற்றினார்கள்.

திரு. பி. முருகையன் அவர்கள் 1962 முதல் 1967 வரை ஆலங்குடி தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு நன்கு பணியாற்றினார்கள்.

திரு. செ. கிருஷ்ணன் அவர்கள் 1977 முதல் 1980 வரை கன்னியாகுமரி தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு சிறந்த முறையில் பணியாற்றினார்கள்.

திரு. ஆர். கிருஷ்ணசாமி கோபாலர் அவர்கள் 1955 முதல் 1957 வரை பட்டுக்கோட்டை தொகுதியிலிருந்தும், 1957 முதல் 1962 வரை மற்றும் 1962 முதல் 1967 வரை இரண்டு முறை கந்தர்வக்கோட்டை தொகுதியிலிருந்தும் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு பாராட்டத்தக்க வகையில் பணியாற்றினார்கள்.

திரு. கே. மருதாசலம் அவர்கள் 1977 முதல் 1980 வரை தொண்டாமுத்தூர் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு சீரிய முறையில் பணியாற்றினார்கள்.

முற்பகல் 10–10

திரு. இரா. மகேந்திரன் அவர்கள் 1989 முதல் 1991 வரை மற்றும் 1996 முதல் 2001 வரை, இரண்டு முறை நாட்றாம்பள்ளி தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு சிறப்புறப் பணியாற்றினார்கள்.

திரு. சோ. பால்ராஜ் அவர்கள் 1989 முதல் 1991 வரை மதுரை மத்திய தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு செவ்வனே பணியாற்றினார்கள்.

திரு. அழகு திருநாவுக்கரசு அவர்கள் 1991 முதல் 1995 வரை ஒரத்தநாடு தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு சிறப்பான முறையில் பணியாற்றினார்கள். மேலும், 1991 முதல் 1993 வரை அமைச்சராகவும் பணியாற்றினார்கள்.

2015 ஆகஸ்ட் 24] [பேரவைத் தலைவர்]

திரு. ச. சங்குமுத்து தேவர் அவர்கள் 1971 முதல் 1976 வரை அம்பாசமுத்திரம் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு திறம்படப் பணியாற்றினார்கள்.

திரு. கு. தங்கமுத்து அவர்கள் 1991 முதல் 1996 வரை திருவோணம் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு சிறப்பாகப் பணியாற்றினார்கள்.

இம்முன்னாள் உறுப்பினர்களது மறைவால் அவர்களைப் பிரிந்து வருந்தும் அவர்தம் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் இப்பேரவையின் சார்பிலும், என் சார்பிலும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மறைந்த இப்பெருந்தகைகளுக்கு மரியாதை செலுத்தும் வகையில் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரண்டு மணித்துளிகள் அமைதி காக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று, இரண்டு மணித்துளிகள் அமைதி காத்தனர்.)

3. இரங்கல் தீர்மானங்கள்

(அ) பாரத ரத்னா டாக்டர் ஏ.பி.ஜெ. அப்துல் கலாம், இந்திய முன்னாள் குடியரசுத் தலைவர் மறைவு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *இரங்கல் தீர்மானங்கள். பாரத ரத்னா டாக்டர் ஏ.பி.ஜெ. அப்துல் கலாம், இந்திய முன்னாள் குடியரசுத் தலைவர் அவர்கள் மறைவு குறித்து.*

'இந்தியாவின் ஏவுகணை நாயகன்' என்றும், 'அணுசக்தி நாயகன்' என்றும், 'தலைசிறந்த விஞ்ஞானி' என்றும், 'திருக்குறள் வழி நடப்பவர்' என்றும், 'இளைஞர்களின் எழுச்சி நாயகன்' என்றும் போற்றப்படுபவரும், தன்னுடைய பொன்மொழிகளாலும், கவிதைகளாலும், எழுத்துக்களாலும், தனது எளிமை மற்றும் மென்மையான அணுகுமுறையினால் அனைவரது மனதிலும் நீங்கா இடம் பிடித்தவரும், நாட்டின் பதினோராவது குடியரசுத் தலைவராக இருந்தவரும், தமிழகத்தின் மண்ணின் மைந்தருமாகிய, பன்முகத் தலைவர், பாரத ரத்னா டாக்டர் ஏ.பி.ஜெ. அப்துல் கலாம் அவர்கள் 27–7–2015 அன்று,